# செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.83/2023 நாள் 12.10.2023

## மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் கருணை அடிப்படையில் 35 நபர்களுக்கும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 48 நபர்கள் என மொத்தம் 83 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை இன்று (12.10.2023) வழங்கினார்கள்

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (12.10.2023) நகர் நிருவாக அலுவலகத்தில் கருணை அடிப்படையில் 35 நபர்களுக்கும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 48 நபர்கள் என மொத்தம் 83 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்பட்டு வரும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகங்களில் உள்ள காலி பணியிடங்களுக்கு தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 32 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 16 தட்டச்சர்கள் என 48 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணியிடைக்காலங்களில் இறந்த நிரந்தர பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 35 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை மாண்புமிகு அமைச்சர் வழங்கினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த ஈராண்டுகளில் 1301 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இன்று (12.10.2023) மாண்புமிகு அமைச்சர்

அவர்களால் 35 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கியதைத் தொடர்ந்து இதுவரை 1336 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி ஆணைகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், டுபிட்கோ (TUFIDCO) மேலாண்மை இயக்குநர் திரு.ஹனீஸ் சாப்ரா, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்